**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி</u>**
**<u>முன்னிலை திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ., பி.எல்.,</u>**
**<u>நீதித்துறை நடுவர், பழனி</u>**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 11ம் நாள்**
**2026ம் வருடம் ஜூன் திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை**
<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 250/2016</u>

அரசுக்காக – சார்பு ஆய்வாளர்,
பழனி தாலுகா கா.நி.கு.எண்.16/2016 **... குற்றமுறையீட்டாளர்**

**/எதிர்/**

ரமேஷ், 35/2016
த/பெ.அங்கமுத்து,
மாதாரி தெரு, பாலசமுத்திரம்,
பழனி. **... எதிரி**

இவ்வழக்கு 09.09.2016 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு.B.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.V.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**<u>தீர்ப்புரை</u>**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–</u>**

கடந்த 08.01.2016ம் தேதியன்று மாலை 07.15 மணிக்கு வீட்டிலிருந்த வாதியை ஏண்டா தேவுடியா பயலே, எங்கிட்டவே உன் நாட்டாமை வேலையை காட்டுராயா என்று அசிங்கமாக திட்டி, நெஞ்சில் உதைத்து, கீழே தள்ளிவிட்டு சிறுகாயத்தை ஏற்படுத்தி, தடுக்க வந்த மகுடீஸ்வரனையும் ஏண்டா தாயோழி என்று அசிங்கமாக திட்டி, இடது கை மணிக்கட்டு, கையில் சிறுகாயத்தை ஏற்படுத்தி, இருவரையும் பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும், எனவே, எதிரி இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது பழனி தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார், இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழான குற்றங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

<u>5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –</u>

திரு.ஞானசுந்தரம் தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 09.01.2016ம் தேதி பகல் 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தங்கவேல் என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து நிலைய காவல்நிலைய கு.எண்.16/2016 பிரிவுகள் 294(b),323,506(1) இ.த.ச பிரிவின் கீழ் அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 பதிவு செய்து, சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகள் கன்னிமுத்து, மகேஷ்வரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வைமகஜர் தயார் செய்து அ.சா.ஆ.6 மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றதால் எதிரி கைது செய்யப்படவில்லை. பின்பு காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஸ்ரீதரன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்து, பட்டியல் சாட்சி 1க்கு

ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச் சான்றளித்து, பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(b),323,506(1) இ.த.சவின் கீழ் 30.01.2016ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிவுற்றது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான 294(பி), 323, 506(1)ன் கீழ் உள்ள குற்றங்களானது அரசு தரப்பால் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரியானவர் வாதியை அசிங்கமாக பேசி, சிறுகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்த செயலானது அ.சா.1 முதல் அ.சா.6 ஆகிய சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரியானவர் வாதியை அசிங்கமாக பேசி, சிறுகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்த செயலானது அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார், எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றச்சாட்டுக்கள்

எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**10. தீர்வு –**

கடந்த 08.01.2016ம் தேதியன்று மாலை 07.15 மணிக்கு வீட்டிலிருந்த வாதியை ஏண்டா தேவுடியா பயலே, எங்கிட்டவே உன் நாட்டாமை வேலையை காட்டுராயா என்று அசிங்கமாக திட்டி, நெஞ்சில் உதைத்து, கீழே தள்ளிவிட்டு சிறுகாயத்தை ஏற்படுத்தி, தடுக்க வந்த மகுடீஸ்வரனையும் ஏண்டா தாயோழி என்று அசிங்கமாக திட்டி, இடது கை மணிக்கட்டு, கையில் சிறுகாயத்தை ஏற்படுத்தி, இருவரையும் பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும், எனவே, எதிரி மீது நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் வாக்குமூலம் கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

11. அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் மாலை தன்னை எதிரி காலால் நெஞ்சில் உதைத்து விட்டதாகவும், சின்னப்பன் என்பவர் இறந்துபோன நிகழ்வுக்கு தான் போயிருந்ததாகவும், எதிரியும் அங்கே வந்திருந்ததாகவும், பிரச்சனைக்கு போகாதே என்று தான் சொன்னதாகவும், அப்போது அவர் போய்விட்டதாகவும், பின்னர் தான் வீட்டிற்கு வந்து உட்கார்ந்து இருந்திருந்தபோது தன்னை வந்து அடித்துவிட்டதாகவும், தன்னை அடித்தது மாலை நேரம் எத்தனை மணி என்று தெரியவில்லை என்றும், ஏன்டா அவர்களுக்கு சப்போட்டுக்கு வருகிறாய் என்று சொல்லி அடித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், சுமார் 5 வருடங்களுக்கு முன்னால் மாலை சுமார் 7 மணியளவில் இழவுக்கு போய்விட்டு தனது அண்ணன் அவர் வீட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தபோது, எதிரி தனது அண்ணனுடன் சண்டை போட்டு குச்சியால் அடிக்க வந்தபோது தான் தேத்தி அனுப்பிட்டதாகவும், சண்டையில் தனது அண்ணனுக்கு கையில் ரத்தம் வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.3 தனது சாட்சியத்தில், 2016ம் வருடம் 08.01.2016ம் தேதி தான் சென்டிரிங் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது தனது அப்பாவிற்கு அடிப்பட்டு விட்டதாகவும், சித்தப்பாவிற்கு கையில் காயம் ஏற்பட்டுவிட்ட சொன்னதாகவும், தனது அப்பாவிற்கு நெஞ்சில் அடிப்பட்டிருந்ததாகவும், அப்பாவை மருத்துவமனைக்கு கொண்டு வந்து

சேர்த்துவிட்டு வந்துவிட்டதாகவும், மறுநாள் கேட்டபோது எதிரியும், தனது அப்பாவும் சண்டை போட்டுக்கொண்டதாக சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.1 தனது சாட்சியத்தில், தன்னை எதிரி காலால் நெஞ்சில் உதைத்து விட்டதாகவும், சின்னப்பன் என்பவர் இறந்துபோன நிகழ்வுக்கு தான் போயிருந்ததாகவும், எதிரியும் அங்கே வந்திருந்ததாகவும், பிரச்சனைக்கு போகாதே என்று தான் சொன்னதாகவும், அப்போது அவர் போய்விட்டதாகவும், பின்னர் தான் வீட்டிற்கு வந்து உட்கார்ந்து இருந்திருந்தபோது தன்னை வந்து அடித்துவிட்டதாகவும், ஏன்டா அவர்களுக்கு சப்போட்டுக்கு வருகிறாய் என்று சொல்லி அடித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இந்த சாட்சியத்தை பொய்ப்பிக்கும் வகையில் எந்த பதில்களும் பெறப்படவில்லை.

15. அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து அ.சா.2 மிகத் தெளிவாக எதிரி அ.சா.1ஐ அடித்துள்ளார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, அ.சா.2ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் அ.சா.5 மருத்துவர் தனது சாட்சியத்தில், அ.சா.1ஐ ஒரு நபர் தனது வீட்டில் வைத்து இரவு 08.20 மணிக்கு அடித்து காயப்படுத்தினார் என்று சிகிச்சைக்கு சேர்ந்தார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.3 காயச்சான்று அ.சா.1, அ.சா.2, அ.சா.5 ஆகியோரின் சாட்சியத்தை உறுதிசெய்யும் வகையில் தெளிவாக உள்ளது. அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியும் இந்த காயம் மற்றும் மருத்துவ சிகிச்சை சம்மந்தமான விவரங்கள் குறித்து மிகத் தெளிவாக சாட்சியமளித்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரான அ.சா.1ஐ தாக்கி காயம் ஏற்படுத்தியதற்கான இ.த.ச பிரிவு 323ன் கீழான குற்றம் அரசு தரப்பில் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. அ.சா.2 தன்னை எதிரி தாக்கியதாக முதல் விசாரணையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, அ.சா.2 மகுடீஸ்வரனை தாக்கியதாக முன்வைக்கப்பட்ட இ.தச பிரிவு 323ன் கீழான குற்றம் அரசு தரப்பில் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்தில் அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பதால் இ.த.ச பிரிவு 294(பி)ன்

கீழான குற்றம் அரசு தரப்பில் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்தில் கொலை மிரட்டல் விடுத்தார் என்று எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பதால் இ.த.ச பிரிவு 506(1)ன் கீழான குற்றம் அரசு தரப்பில் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழுள்ள குற்றங்கள் எல்லா தகுநிலை ஐயப்பாட்டுக்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று, இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என்றும், எதிரி மீது இதச பிரிவு 323ன் கீழுள்ள குற்றம் எல்லா தகுநிலை ஐயப்பாட்டுக்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி இதச பிரிவு 323ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் கண்டறிகிறது.

20. எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழுள்ள குற்றங்கள் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என்றும், அதனால் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(1)ல் இருந்து கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்தும், எதிரி மீது இதச பிரிவு 323ன் கீழுள்ள குற்றம் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிரி இதச பிரிவு 323ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, இந்த வழக்கின் அ.சா.1 தங்கவேல் எதிரியின் சொந்த தகப்பனார் என்றும், இறந்த வீட்டுக்கு செல்வது சம்மந்தமான சிறிய மனஸ்தாபத்தில் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றும், இந்த எதிரி தான் அ.சா.1ஐ நல்ல முறையில் பராமரித்து வந்து, தற்போது சமீபத்தில் தான் அ.சா.1 இறந்துவிட்டார் என்றும், எதிரியானவர் அ.சா.1க்கு மகன் என்ற முறையில் எல்லா காரியங்களையும் செய்து முடித்தார் என்றும், எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டதால் உறவு நிலை, வழக்கின் தன்மை, தற்போதைய சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு எச்சரிக்கை

செய்து, இந்த எதிரியை நன்னடத்தை சட்டம் பிரிவு 3ன் கீழ் விடுதலை செய்யப்படுகிறது. (Release on Admonition).

**21. வழக்குச் சொத்து –**

இந்த வழக்கில் வழக்குச்சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூன் திங்கள் 25ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.06.25 19:56:55 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | தங்கவேல் |
| அ.சா.2 | மகுடீஸ்வரன் |
| அ.சா.3 | சங்கிலியப்பன் |
| அ.சா.4 | கன்னிமுத்து |
| அ.சா.5 | டாக்டர்.ஸ்ரீதரன் |
| அ.சா.6 | வேலுமணி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலம் | 09.01.2016 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பார்வை மகஜர் | 09.01.2016 | அ.சா.ஆ.2 | அ.சா.4 | அசல் |
| 3 | தங்கவேல் காயச்சான்று | 08.01.2016 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4 | மகுடீஸ்வரன் காயச்சான்று | 08.01.2016 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5 | முதல் தகவலறிக்கை | 09.01.2016 | அ.சா.ஆ.5 | அ.சா.6 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | மாதிரி வரைபடம் | 09.01.2016 | அ.சா.ஆ.6 | அ.சா.6 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்கள் – இல்லை.**

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் – இல்லை.**

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.06.25 19:57:02 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
5. தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.